எம்.சி.ஓ.பி எண்: 5289/2018 தேதி: 06.04.2026

மசா. : 1

பெயர் : மேரி

க /பெ. : ரவிசங்கர்

வயது : 41

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்து என் மகன் விஜயபிரகாஸ் இறந்ததற்காக மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த விபத்து நடக்கும்போது என் மகனின் வயது 17. மசாஆ 10 ன் படி விபத்து சமயத்தில் என் மகன் இளஞ்சிறார் என்றால் சரி. விபத்து சமயத்தில் என் மகன் இருசக்கரவாகனத்தில் சென்றதாக கூறினார்கள். என் மகன் இருசக்கரவாகனத்தை ஓட்டவில்லை. பின்பக்கம் அமர்ந்து சென்றார். யார் ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த விவரத்தை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. மசாஆ10 ல் மதிவாணன் என்ற இளஞ்சிறார் என் மகன் சென்ற இருசக்கரவாகத்தை ஓட்டி சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மதிவாணனுக்கு என் மகனை எப்படி தெரியும் என்பது பற்றி எனக்கு தெரியாது. என் மகன் விபத்து சமயத்தில் எங்கு செல்வதாக என்னிடம் சொன்னாரா என்றால் என்னிடம் சொல்லி விட்டு செல்லவில்லை. இந்த விபத்திற்கு பின் மதிவாணன் என்னை பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் என் மகன் பெட்ரோல் பங்க்யில் பகுதி நேரம் வேலை செய்தார். அதற்கான ஆவணம்தாக்கல் செய்யவில்லை. விபத்து நடந்த பிறகு சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை. என் வீட்டில் உள்ளவர்கள், உறவினர்கள் யாரும் சம்பவ இடத்தை பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் என் உடன் என் இரண்டு மகன்களும், என்னுடைய பெற்றோர்களும் என் உடன் வாழ்ந்து வந்தார்கள். என்னுடைய மற்றொரு மகன் சூரிய பிரகாஸ். இளவர் என்று தொிந்தும் இரண்டு இளவர்களும் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் இருசக்கரவாகனத்தை பயணம் செய்தது மோட்டார் வாகன சட்டம் மற்றும் காப்பீடு விதிமுறைகளுக்கு எதிரானது என்றால் எனக்கு தெரியாது. அதனால் 2ம் எதிர்மனுதாரர்கள் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல எ்னறால் சரியல்ல. என் மகன் சூரியபிரகாஸ் மீது போலீஸ்சார் விபத்திற்கு பிறகு வழக்கு போட்டார்கள் என்றால் போட்டார்கள். சூரியபிரகாஸ் கஞ்சா எடுத்து சென்றதாக வழக்கு போட்டார்கள். விபத்து நடந்த தேதியில் விபத்து நடந்த இடத்தில் சூரிய பிரகாஸ் கஞ்சா வைத்திருந்ததாக வழக்கு போட்டார்கள். அந்த வழக்கை என் மகன் சிறப்பு நீதிமன்றத்தில் நடத்திருந்தார் என்றால் எனக்கு

தெரியாது. சூரிய பிரகாஸ்யை விபத்து நடந்த உடனே போலீஸ்சார் கைது செய்தாரா எ்னறால் எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து நடந்த மறுநாள் என் மகனை அடக்கம் செய்தோம். விபத்து நடந்த அன்றும், மறுநாளும் சூரிய பிரகாஸ் எங்களுடன் இருந்து எல்லா வேலைகளையும் பார்த்துகொண்டார் என்றால் இருந்தார். சாட்சி மீண்டும் போலீஸ்சார் சூரிய பிரகாஸ்யை விபத்து நடந்த அன்றே அழைத்து சென்றார். என் மகனை எங்கு வைத்து போலீஸ்சார்கள் கைது செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த கேள்வியை கேட்டு மனுதாரர் தரப்பு ஆட்சேபனை செய்யப்பட்டது. என் மகனை கைது செய்த அன்றே எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. என் மகன் சூரிய பிரகாஸ்யை நான் சொல்லுவது போல் கைது செய்யவில்லை என்றாலும் இறுதி சடங்கு நடக்கும்போது என்னுடன் தான் சூரிய பிரகாஸ் இருந்தார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் இளைய மகன் விஜயபிரகாஸ்தான் அவருடைய பையில் கஞ்சாவை எடுத்துக்கொண்டு மதிவாணன் ஓட்டிய இருசக்கரவாகனத்தில் சென்றார் என்றாலும் அந்த சமயத்தில் போலீஸ்சாரிடமிருந்து தப்பிபதற்காக இருசக்கரவாகனத்தை பாலத்தில் மீது வேகமாக ஓட்டிச்சென்று வாகனத்தின் சுவரின் மீது மோதி இருசக்கரவாகனத்திலிருந்து தூக்கி வீசப்பட்டு பாலத்திருந்து சாலையில் அவர் வைத்திருந்து பையுடன் கிழே விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. கிழே விழுந்தவுடன் விஜய பிரகாஸ் இறந்துவிட்டார் எ்னபதால் அவர் மீது வழக்கு போடமுடியாது என்பதால் போலீஸ்சார் என்னுடைய மூத்த மகன் மீது பொய்யான வழக்கு போட்டுள்ளார் என்றால் தெரியாது. விபத்து நடந்த இடத்தில் என் மூத்த மகன் இல்லை என்பதால் அவர் விடுதலை செய்யப்பட்டார் என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் இறந்த என்னுடைய மகன் மற்றும் இருசக்கரவாகனத்தை ஓட்டியவர் இளவர் என்பதாலும் பாலீசி விதிமுறைக்கு எதிராக இருசக்கரவாகனத்தை ஓட்டியதாலும் என் மகன் சட்டத்திற்கு புறம்பாக செயலில் ஈடுபட்டதாலும் இரண்டாம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல. விபத்து சமயத்தில் என் இளைய மகன்தான் கஞ்சா வைத்திருந்தார் என்பதை சொன்னால் அவருக்கு இழப்பீடு கிடைக்காது என்பதால் பொய்யான முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தயாாிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.